**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**C.C.No. 66/2022**

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திரு.மணிகண்டன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்டன் | வயது | : | 27/26 |
| த.பெ/ க.பெ. | : | சுப்பிரமணியன் | தொழில் | : | தனியார் வேலை |
| ஊர் | : | அர்த்தனேரி | நிலை | : | LW01 / PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு ,மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

நான் அர்த்தனேரியில் வசித்து, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கருப்பையா எனது தாத்தா ஆவார். கடந்த 01.04.2021ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில், முருகபாண்டியன் என்பவர் எனக்கு போன் செய்து, அர்த்தனேரி பஸ் ஸ்டாண்ட் அருகில் என் தாத்தாவிற்கு விபத்து நடந்ததாக சொன்னார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, எனது தாத்தா கால் மற்றும் நெஞ்சில் அடிபட்டு, மயக்க நிலையில் இருந்தார். பின்னர், 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது தாத்தாவை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். மேல்சிகிச்சைக்காக எனது தாத்தாவை தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

சேர்த்தோம். சிகிச்சை பலனின்றி எனது தாத்தா இறந்துவிட்டார். எனது தாத்தா அர்த்தனேரி பஸ் ஸ்டாண்ட் அருகில் டீக்குடித்துவிட்டு சாலையை கடக்க முற்படும்போது, அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எந்த தேதியில் என் தாத்தா விபத்தில் இறந்துபோனார் என்றால் 06.04.2021ம் தேதியன்று இறந்தார். நான் எனது தாத்தாவை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்து, அவர் இறக்கும்வரை அவருடன்தான் நான் இருந்தேன் என்றால் சரிதான். நான் இடையில் எனது ஊருக்கு வந்தேனா என்றால் 05.04.2021ம் தேதியன்று எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு, அன்று மாலை மருத்துவமனைக்கு சென்றேன்.

2) விபத்து பற்றிய தகவலை எனக்கு முருகபாண்டியன்தான் சொன்னார் என்பதை புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் தாத்தாவிற்கு 85 வயது இருக்குமென்றால் வயது தெரியவில்லை. சம்பவ சமயத்தில் எனது தாத்தா சைக்கிளில் சென்றார் என்றால் சரிதான். இடதுபுறமாக எனது தாத்தா சைக்கிளில் சென்றுக்கொண்டிருக்கும்போது சாலையை கடந்தால்தான் எங்கள் ஊருக்கு செல்லலாம் என்றால் சரிதான். எனது தாத்தா சாலையை குறுக்காக கடக்கும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான், எனது தாத்தா வாகனங்கள் வருவதை கவனிக்காமல் சாலையை குறுக்காக கடந்ததால்தான்

இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், இந்த விபத்திற்கு முழுக்காரணம் என் தாத்தாவின் கவனக்குறைவுதான் என்றாலும் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.